DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.238/2019**

| | | | |
|---|---|---|---|
| Name | : | ஏஞ்சலின் பிரேம் மாலா | **Rw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of August 2022.

**முதல் விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் களப்பணியாளர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. நான் என்னுடைய களப்பணியாளர் அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது எ.மா.சா.ஆ.1 ஆகும். மனுதாரர்களின் கற்றறிந்த வழக்கறிஞர் இந்த ஆவணத்தைக் குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கிறார்.

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை களப்பணியாளராக காப்பீடு கழகம் நியமனம் செய்தற்கான உத்தரவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஐஆர்டிஏ பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருக்கிறேனா என்றால் எந்த களப்பணியாளருக்கும் இந்த பரீட்சை தேர்ச்சி பெறவேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் இந்த காப்பீடு நிறுவனத்தில் பணி செய்யவில்லை. 6 காப்பீடு நிறுவனங்களுக்கு களப்பணியாளராக இருக்கிறேன்.

இன்சூரன்ஸ் காப்பீடு ஒழுங்குமுறை ஆணையத்தின் எந்த விதமான தேர்விலும் தேர்ச்சி பெறாததால் களப்பணியாளர் அறிக்கை வழங்குவதற்கு எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து வழக்கில் காரை ஓட்டிய நபரையும் உரிமையாளரையும் விசாரித்தேன். நான் எங்குவைத்து விசாரித்தேன் என்றால் வீட்டில் சென்று தான் எப்பொழுதும் விசாரிப்பேன். புளியரையில் சென்று விசாரித்தேன். இந்த விபத்து சம்பந்தமாக வெளி மாநிலங்கள் சென்றேனா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. புகார்தாரருக்கு 36 வயது ஆகிறது. நான் விசாரிக்கும் நபர்களிடம் வாக்குமூலம் பெறவேண்டும் என்றால் இந்த வழக்கில் நான் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. சம்பவம் நடந்ததாக கூறும் இடத்தை நான் பார்க்கவில்லை. இந்த இன்சூரன்ஸ் நிறுவனம் கேட்காததால் நான் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்க்கவில்லை. குற்றவழக்கில் சம்பந்தப்பட்ட யாரையும் நான் விசாரித்தேனா என்றால் குற்றவழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இருப்பதால் நான் விசாரிக்கவில்லை. குற்ற வழக்கின் கோப்புகளை மொழிபெயர்த்து தரச்சொன்னதன் பேரில் நான் மொழிபெயர்த்து இந்த அறிக்கையைத் தயார் செய்திருக்கிறேன். வேறு எதுவும் நான் செய்யவில்லை. குற்ற வழக்கு தற்பொழுதும் புலன் விசாரணையில் தான் இருந்து வருகிறது. குற்றவழக்கில் காவல்துறை இதுவரை வரைபடம் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். குற்ற வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மனுதாரர்களின் புகைப்படங்கள், ஆதார் அட்டைகள் மற்றும் அவர்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தொலைப்பேசியில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காப்பீடு நிறுவனத்தில் மனுதாரர்கள் சமர்ப்பித்ததை நான் இணைத்திருக்கிறேன். பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்தவர் மது அருந்தியதாகக் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனுதாரர் மனுவில் கூறியவாறு விபத்து நடந்தது உண்மை என்றால் சரிதான். நான் தான் ஏஞ்சலின் பிரேம் மாலா என்பதற்கு இதுவரை எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னுடைய ஆதார் அட்டையின் ஒளிப்பட நகலை கேட்டால் தரத் தயாராக இருக்கிறேன். நான் களப்பணியாளர் கிடையாது அதற்கான அனுமதியும் கிடையாது என்றால் சரியல்ல. காப்பீட்டு கழகத்தின் சார்பாக சாட்சியம் அளிக்க தகுதியற்ற நபர் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் இந்த குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.